**கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபை**
**(சுற்றாடல் அமைச்சு)**

***மாத்தறை மாவட்ட அலுவலக வசதிகளுக்காக கட்டிடமொன்றை குத்தகை அல்லது வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளுதல்***

கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபையின் மாத்தறை மாவட்ட அலுவலகத்திற்காக, கீழே குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளுக்கு அமைவாக மாத்தறை மாவட்டத்திற்குள் குத்தகை அல்லது வாடகை அடிப்படையில் வீடொன்றையோ அல்லது கட்டிடமொன்றையோ பெற்றுக்கொள்ள வேண்டியுள்ளது.

1. சுமார் 2,000 சதுர அடி பரப்பளவைக் கொண்ட கட்டிடம்.
2. தலா சுமார் 200 சதுர அடி பரப்பளவைக் கொண்ட 03 அறைகள்.
3. உணவருந்தும் அறை ஒன்று.
4. சுமார் 1,200 சதுர அடி கொண்ட திறந்த வெளிப்பகுதி.
5. குறைந்தபட்சம் 02 கழிப்பறைகள்.
6. குளிரூட்டல் (Air Conditioning) வசதி மற்றும் தரை ஓடுகள் பதிக்கப்பட்ட இடமாக இருத்தல் வேண்டும்.
7. ஊழியர்கள் இலகுவாக சென்றடையக்கூடியதாகவும், பிரதான வீதிக்கு அருகாமையிலும் அமைந்திருக்க வேண்டும்.
8. பாதுகாப்பான இடமாக இருத்தல் வேண்டும்.
9. தரைத் தளமாக இருத்தல் வேண்டும். (அலுவலகத்திற்குரிய மோட்டார் சைக்கிள் இருப்பதன் காரணமாக).
10. வாகனங்களை நிறுத்துவதற்கான வசதி இருத்தல் வேண்டும்.

**முக்கியமானது - மேற்குறிப்பிட்ட 01 முதல் 10 வரையிலான நிபந்தனைகளுக்கு மேலதிகமாக, பின்வரும் ஆவணங்களை சமர்ப்பிப்பது கட்டாயமாகும்:**

- குறித்த வீட்டையோ அல்லது கட்டிடத்தையோ குத்தகைக்கு அல்லது வாடகைக்கு வழங்குவதற்கான சட்டபூர்வமான உரிமையை உறுதிப்படுத்தும் ஆவணத்தின் பிரதி.
- தொடர்புடைய உள்ளூராட்சி நிறுவனத்தினால் அங்கீகரிக்கப்பட்ட கட்டிடத் திட்டத்தின் பிரதி.
- குறித்த சொத்தை குத்தகைக்கு/வாடகைக்கு வழங்குவதற்காக வழங்கப்பட்ட அரசாங்க மதிப்பீட்டுச் சான்றிதழின் பிரதி.

ஆர்வமுள்ள கேள்விதாரர்கள், கையொப்பமிடப்பட்ட முன்மொழிவுகள்/விபரங்கள் உள்ளிட்ட விலைமனுக்களை, 30 செப்டம்பர் 2026 திகதி பிற்பகல் 2.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர், பின்வரும் முகவரிக்கு பதிவு செய்யப்பட்ட தபால் மூலம் அனுப்பவோ அல்லது நேரடியாக கொண்டு வந்து நிர்வாகப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள விலைமனுப் பெட்டியில் இடவோ

வேண்டும்:தலைவர் – கொள்வனவுக் குழு, கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபை,இல. 177, நாவல வீதி,நாரஹேன்பிட்ட, கொழும்பு – 05.

முழுமையற்ற விண்ணப்பங்கள், காலதாமதமாக சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் மற்றும் தொலைநகல் (Fax), மின்னஞ்சல் அல்லது சாதாரண தபால் மூலம் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் விலைமனு மதிப்பீட்டிலிருந்து நிராகரிக்கப்படும்.

சமர்ப்பிக்கப்படும் விலைமனு அடங்கிய உறையின் மேல் இடது மூலையில் பின்வரும் விடயம் தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும்:

"அலுவலக வசதிகளை குத்தகை அல்லது வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளுதல் – மாத்தறை மாவட்டம்"

இது தொடர்பாக ஏதேனும் விசாரணைகள் இருப்பின், 0112-554624 என்ற தொலைபேசி இலக்கத்தின் ஊடாக நிர்வாக உத்தியோகத்தரை தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

**தலைவர்**
**கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபை**
**இல. 177, நாவல வீதி,**
**நாரஹேன்பிட்ட, கொழும்பு – 05.**
08 செப்டம்பர் 2026